1974 சனவரி 25]

எல்லாபுரம் ஒன்றிய கிராமங்களுக்கு நீர் வழங்கு திட்டங்கள்

*165 **வின—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அரிசன அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய வட மதுரை, கிளாம்பாக்கம், தொளவேடு, கோட்டை குப்பம், இலச்சிவாக்கம், மற்றும் திருக்கண்டலம் ஆகிய ஊர்களில் அமைக்கப்படும் அரிசன மக்களுக்கான குடிநீர்த் திட்டங்கள் மேன்மேலும் காலதாமதம் ஆவதற்கான காரணங்கள் யாவை?

(இ) இவை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய (1) வடமதுரை, (2) கிளாம் பாக்கம், (3) தொளவேடு, (4) கோட்டைக் குப்பம், (5) இலச்சி வாக்கம் ஆகிய 5 ஊர்களில் அமைக்கப்படும் அரிசனங்களுக்கான குடிநீர்த் திட்டங்களுக்கு எதிர்பார்க்கப்படும் மதிப்பீட்டுச் செலவுக்குச் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் 1972-ம் ஆண்டு அக்டோபர் மாதம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்கள் செயல்பட தேவையான குடிநீர் வழங்கும் இயந்திரங்களும், குடிநீர்க் குழாய்களும் வாங்க விலைவாசி விவரங்கள் கோரப்பட்டு பின்னர் அவைகள் முறையே உதவிப் பொறியாளர், கோட்டப் பொறியாளர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு மேற்கண்ட பொருள்களைக் குறைந்த விலையில் விற்க முன் வருபவர்களுடைய விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு அதற்குப்பிறகு தான் அவர்களிடமிருந்து அப்பொருள்கள் பெற முறையான ஆணைகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்படுகின்றன. வேலைகளைத் தொடங்கவும் செயல்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டுள்ள மேலே கூறப்பட்டுள்ள நிர்வாக விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருப்பதால் ஏற்படக்கூடிய காலதாமதம் தவிர்க்க முடியாததொன்றாகும்.

திருக்கண்டலத்தில் அமைக்கப்படும் அரிசனங்களுக்கான குடிநீர்த்திட்டத்திற்கும் 1—9—1973-க்கு பின்னர் தான் மாவட்ட ஆட்சித்தலைவரால் செலவு மதிப்பீட்டுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(இ) வேலைகள் நடப்பு நிதியாண்டிற்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டிலே அனுமதிக்கப்பட்டும் இன்னும் அந்தப் பணிகள் முடிவடையவில்லை. இதற்கு முக்கியமான காரணம், மாவட்டம் முழுவதற்கும் ஒரே ஒரு அரிசன நல அதிகாரி இருந்துகொண்டு, மேற்பார்வை செய்ய இயலவில்லை. ஆகவே, ஒன்றிய இன்ஜினியர் களைக்கொண்டு அந்த வேலைகளை, எக்ஸிகுயூஷன் வேலைகளை மட்டும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மாவட்ட நல அதிகாரி அல்ல இந்தத் தாமதத்திற்கெல்லாம் பொறுப்பு, இயந்திரங்கள் வாங்க, அது சரியா என்று டெண்டர் கேட்க, குறைந்த விலைபற்றிப் பரிசிலிக்க இவைகளுக்கெல்லாம் உதவிப் பொறியாளர், கட்டிடப் பொறியாளர் இவர்களெல்லாம்தான் அந்த வேலையிலே ஈடுபடுகிறார்கள். மாவட்ட நல அதிகாரிக்கு இவர்களெல்லாம் துணையாக இருக்கிறார்கள். எனவே, அங்கேதான் தாமதம் ஏற்படுகிறதே தவிர, மாவட்ட நல அதிகாரியால் தாமதம் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் சட்டமுன்வடிவு

தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.